1995 மே 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 504, திரு. என்.ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

504—

ம. அரசூரில் துணை சுகாதார நிலையம் அமைத்தல்

***36398**—*திரு. என்.ஆர். ராஜேந்திரன்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், ம. அரசூர் கிராமத்திற்கு துணை சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1994-95-ஆம் ஆண்டிற்கு புதியதாக துணை சுகாதார நிலையங்கள் அமைக்க மத்திய அரசின் ஒப்புதல் ஏதும் இல்லை. எனவே இந்தத் துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

திரு. என்.ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ம. அரசூர், பேருந்து வசதி மற்றும் சாலை வசதிகளை சுலபமாக அமைத்துத்தர முடியாத அளவுக்கு கொள்ளிடக் கரைப் பகுதிகளில் அமைந்துள்ளது. இந்த கிராமங்களுக்கு வேறு மாற்றுப் பாதையோ வேறு வண்டிப் பாதைகளோ ஏதும் இல்லாத ஒரு பாதையாக இருக்கிறது. இதன் சுற்று வட்டாரத்தில், அருகாமையில் மருத்துவமனை இல்லாத காரணத்தினாலும் அவசரச் சிகிச்சை செய்து கொள்வதற்கு முதல் உதவி வசதி இல்லாத காரணத்தினாலும் இங்கு வாழும் மக்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். ஆகவே திக்கற்றவர்களின் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கும் தமிழக முதல்வர் இதய தெய்வம் ஆட்சியில் இவர்களுக்கு ஒன்றியங்கள் மூலம் நடத்தப்படுகின்ற மருத்துமனையையாவது அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரை மத்திய அரசாங்கம் எவ்வளவு அனுமதிக்கிறதோ அதைத்தான் நாம் இங்கே பிரித்துக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்த ஆண்டு

அவர்கள் அனுமதிக்கவில்லை. எனவே அடுத்த ஆண்டிலே அனுமதிக்கப்படுகின்றபோது முன்னுரிமையின் அடிப்படையிலே இந்தப் பகுதியை எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அதே நேரத்திலே உள்ளாட்சித் துறையினுடைய சார்பாக அங்கே டிஸ்பன்ஸரி திறப்பதைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல முடியாது. அந்தத் துறையினுடைய சார்பாக நீங்கள் கேட்ட வேண்டும். ஆனால் இப்போது இருக்கின்ற கொள்கைப்படி உள்ளாட்சித் துறையினுடைய சார்பாக டிஸ்பன்ஸரிஸ் திறப்பதற்கான வாய்ப்பு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறையே, நல்வாழ்வுத் துறையே அதை கவனிக்க வேண்டும் என்ற ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கின்ற காரணத்தினாலே இதிலே சாத்தியக் கூறு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 505. திருமதி ப. சரஸ்வதி. மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்

505—

பரமத்தியில் பணிமனை ஏற்படுத்துதல்

***35991**—திருமதி ப. சரஸ்வதி:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தியில் அகதிகள் முகாம் உள்ள புறம்போக்கு இடத்தில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அண்ணா போக்குவரத்துக் கழகம் வேலூரில் (பரமத்தி வட்டம்) உள்ள பொத்தனூர் கிராமத்தில் அண்ணா போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க மாரியம்மன் கோவில் நிலத்தினை தேர்வு செய்து இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினரிடம் நடவடிக்கையில் உள்ளது. பரமத்தி அகதிகள் முகாம் உள்ள இடத்தில் அண்ணா போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.